1.

# HOLY TRINITY INTERNATIONAL SCHOOL

Melpalai, Edaicode Post, K.K. District.

**GRADE –VI**

## TAMIL

இயல்-1.1 : இன்பத்தமிழ்

## QUESTION BANK

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் விடைகளை நன்றாகப் படித்து எழுதி பழகுக.

**1.குறுவினாக்கள்:**

**1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டிய பெயர்கள் யாவை?**

நிலவு, மணம், பால், வானம், தோள், வாள் என்றெல்லாம் பெயர்கள் சூட்டியுள்ளார்.

**2. இன்பத்தமிழ் பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டினை எழுதுக?**

“தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்-இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்’

**3. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?**

1. நீரின்றி வேளாண்தொழில் நிகழாது.
2. நீர் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கு உயிர் போன்றது.
3. நீரினால் விளையும் விளைச்சலினால்மக்கள் பயன் பெறுவர்

**4. வேல் என்பது ஒரு ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது? கருத்துக் கூறுக.**

1. வேல் கூர்மையான ஆயுதம் . அதுபோல தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்கள் பாடல்கள் கவிதைகள் கூர்மையான கருத்துக்களைக் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துகிறது
2. ஆகவே தமிழ் வேலுடன் ஒப்பிடப்படுகிறது. அதேபோல் கத்தியின் முனையை விட பேனாவின் முனை கூர்மையானது என்றபழமொழியும் இதனையே விளக்கும்.

### 1.2.தமிழ்க் கும்மி

**1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

1. பொய்மை அகற்றும். மனதில் உள்ள அறியாமை என்ற இருளினை நீக்கும்.
2. அன்பு உடையவருக்கு இன்பம் தரும். பாடல்கள் நிறைந்த மொழி. உயிர்ப் போன்ற உண்மையை கற்பித்து அறத்தின் உயர்வை உணர்த்தும். இவ்வுலக மக்கள் வாழ்வதற்கு வழிகாட்டும்.

**2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?**

செந்தமிழின் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

**3.கால வெள்ளத்தினை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?**

நம் தமிழ் மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய மொழி. அறிவைப் பெருக்கும் விதமாகப் பல சிறந்த நூல்களைப் பெற்றுள்ள மொழி.

இப்புகள் பெற்ற மொழி இயற்கை மாற்றங்களான கடல் சீற்றங்களினாலும் கால மாற்றங்களினாலும் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கும். இந்த உலகம் சிறந்து வாழ வழிகாட்டும் மொழி

**4. தமிழ்க் கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்துக் கொண்டவற்றை எழுதுக?**

போய்மை அகற்றி மனதில் உள்ள அறியாமையை அகற்றும் அன்புடைய பலரின் இன்பம் நிறைந்த மொழி. உயிர் போன்ற உண்மையை ஊட்டி உயர்ந்த அறத்தினை தந்த மொழி. இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது.

.

## 1.3.வளர் தமிழ்

**1. தமிழ் மூத்தமொழி எனப்படுவது எதனால்?**

இலக்கியங்கள் தோன்றியப்பிறகே அவற்றிற்கு இலக்கணம் தோன்றியிருக்கவேண்டும். தமிழில் நமக்குகிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூல் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கியங்கள் பல இருந்திருக்க வேண்டும்.இதனைக் கொண்டு தமிழ் தொன்மைமிக்க மூத்த மொழி என்பதை அறியலாம்.

**2. தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக?**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி , வளையாபதி, யசோதர காவியம் , சூளாமணி நாகக்குமார காவியம், உதயகுமார காவியம் , நீலகேசி

**3. அ..்.:றிணை பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் யாது?**

திணை உயர் திணை அ:.்..றிணை என இருவகைப்படும்.உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமைய வேண்டும். ஆனால் தாழ்திணை என்று கூறாமல் உயர்வு அல்லாத திணை என்று பெயரிட்டனர்.

பாகற்காய் கசப்பு சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல் இனிப்பு அல்லாத காய் என்று வழங்கினர்.

**4. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக?**

ஓசை இனிமை, சொல் இனிமை ,பொருள் இனிமை, ஆகியவை ஒருங்கே கொண்டது தமிழ் மொழி. பன்மொழி கற்ற பாரதியார் தமிழ் மொழியின் இனிமையை

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம். "-என்கிறார்

**5. தமிழ் மொழியின் சிறப்பு குறித்து எழுதுக?**

உலகமொழிகள் பலவற்றில் இலக்கிய இலக்கண வளம் பெற்று திகழும் மொழிகள் மிகச்சிலவே. அவற்றுள் செம்மை மிக்க மொழிகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவை மிகச்சிலவே. தமிழ் மொழி அத்தகைய சிறப்பு பெற்ற மொழியாகும்.தமிழ் இலக்கியங்கள் ஓசை, இனிமை சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டது.தமிழ் மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி. தமிழ் எழுத்துக்களின் ஒலிப்பு முறை மிக எளிமையானது. தமிழ் எழுத்துக்கள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துக்களாகவே உள்ளன. முத்தமிழான இயல், இசை, நாடகம் கொண்ட மொழியாகும்.தமிழ் மொழி சொல் வளம் மிக்கது. ஒரு

பொருளின் பல நிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டியுள்ளது. தமிழ் மொழியின் சிறப்பாகும்.

**கூடுதல் வினாக்கள்**

**1. மொழி என்றால் என்ன?**

மனித இனம் கண்டறிந்த சிறந்த கண்டுபிடிப்பு மொழி. மனிதரை பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்தியும் மேம்படுத்தியும் காட்டுவது மொழி. மொழி நாம் சிந்திக்க உதவுகிறது. சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுகிறது.பிறர் கருத்தை நாம் அறிய உதவுவதும் மொழியே ஆகும்.

**2. தமிழ் மொழி இலக்கிய இலக்கண வளம் நிறைந்தது, விளக்குக?**

தமிழ் வளமை மிக்க மொழி. தொல்காப்பியம் , நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது.தமிழ் மொழி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு , ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது. திருக்குறள் , நாலடியார் , முதலிய அறநூல்கள் பலவும் நிறைந்தது. சிலப்பதிகாரம் , மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது. இவ்வாறு இலக்கிய இலக்கண வளம் நிறைந்தது தமிழ் மொழி.

**3. மா-என்ற சொல்லின் பொருள் யாது?**

மா-என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு ,அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.

**4. முத்தமிழ் விளக்குக?**

தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இயல் தமிழ் எண்ணத்தை வெளிப்படுத்தும். இசைத்தமிழ் உள்ளத்தை மகிழ்விக்கும். நாடகத்தமிழ் உணர்வில் கலந்து வாழ்வை நல்வழிப்படுத்தும்.

**1. ஐம்பூதங்கள் யாவை?**

நிலம் , நீர், நெருப்பு, காற்று ,ஆகாயம் ஆகும்.

**2. ஔவையார் பாடலில் கூறியுள்ள அறிவியல் கருத்து என்ன?**

திரவப்பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்து.

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நால் நாழி.

என ஔவையார் பாடலில் கூறப்பட்டுள்ளது.

**3. இலக்கியங்களில் காணப்படும் அறுவை மருத்துவம் குறித்து எழுதுக?**

போர்க்களத்தில் மார்பில் புண்படுவது இயல்பு. வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை நரம்பினால் தைத்த செய்தியும் நற்றிணை என்னும் நூலில் காணப்படுக்றது.

**4. கலிலியோ வழி கபிலர் கருத்தை கூறுக?**

தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்பது அறிவியல் அறிஞர் கலிலியோ நிறுவிய கருத்து இது. இக்கருத்து திருவள்ளுவ மாலை என்னும் நூலில் கபிலர் எழுதிய பாடலில் இடம் பெற்றுள்ளது.

தினை அளவு போதா சிறுபுல் நீர்-நீண்ட
பனையளவு காட்டும்.

4.

## 1.5 தமிழ் எழுத்துக்களின் வகை தொகை (இலக்கணம்)

1. இலக்கணம்----------- வகைப்படும். (ஐந்து)
2. ஒலி வடிவமாகவும் வரி வடிவமாகவும் எழுதப்படுவது---------- (எழுத்து).
3. குறில் எழுத்து ஒலிக்கும் கால அளவு---------- (1மாத்திரை).
4. நெடில் எழுத்து ஒலிக்கும் கால அளவு----------- (2மாத்திரை).
5. மெய் என்பது--------- (உடம்பு).
6. மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு------------ (அரை மாத்திரை).
7. ஆய்த எழுத்து ஒலிக்கும் கால அளவு---------------(அரை மாத்திரை).
8. உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்வதால் தோன்றுபவை ---------(உயிர் மெய் எழுத்துக்கள்).
9. வல்லினம்-----------(கசடதபற).
10. மெல்லினம்-----------(ஙஞணநமன).
11. இடையினம்-----------------(யரலவழள).